சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறது.

<u>பு.த.சா.1 வாசு, த /பெ கந்தசாமி, வயது.47</u>

**<u>குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.–</u>**

குற்றம் சாட்டப்பட்டவர் மீது மாண்புமிகு கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலும், மாண்புமிகு சார்ப்பு நீதிமன்றத்திலும், நெடுமாறன், சரவணன், நடராஜன் , மற்றும் அம்பேத்கர் ஆகியோர்கள் இதே போன்ற காசோலையை வைத்து சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய அதே வழக்கறிஞர் தான் மேற்படி வழக்கையை நடத்தி வருகிறார் என்றும், எனக்கு விவரங்கள் தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4 வது பங்குதாரராக பதிவு எண். 569/2016 என்ற பதிவு எண்ணில் லட்சுமிசரஸ்வதி பைனான்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வந்துள்ளேன் என்றால் அதை தவறாக என் கையொப்பத்தை பயன்படுத்தி உள்ளார்கள். மேற்படி நிறுவனத்தில் 5 வது பங்கு தாரராக எதிரியின் பெயர் குறிப்பிட்டுள்ளதால் நான் அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எண்.4/1 சவுகத்அலிபேட்டை என்ற முகவரியில் உள்ள சொத்து யாருடையது என்றால் எனக்கு தெரியாது. 7 வது பங்குதாரராக பதிவு எண். 881/2013 என்ற பதிவு எண்ணில் ஸ்ரீ லட்சுமிசரஸ்வதி பைனான்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வந்துள்ளேன் என்றால் இல்லை. அதிலும் சீட்டிற்காக தவறாக என் கையொப்பத்தை பயன்படுத்தி உள்ளார்கள். மேற்படி தொழிலில் 1 வது பங்கு தாரராக எஸ்.டி.சி 365/2022 என்ற வழக்கின் புகார்தாரரான ஜீவானந்தன் என்பவரும், மேற்கண்ட சிவில் வழக்கில் சொல்லியுள்ள அம்பேத்கர் என்பவர் 8 வது பங்கு தாரராக இருப்பதால் நான் அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் காசோலை மற்றும் பாண்டு பத்திரங்களில் கையொப்பம் செய்தும், எனது ஆதார் கார்டில் நகல் ஆகியவற்றை கொடுத்துள்ளேன், அதை வைத்துதான் மேற்படி கையொப்பங்களை எதிரி தவறாக பயன்படுத்தியுள்ளார். மேற்படி ஆவணங்களை 2012 ம் ஆண்டு முதல் கொடுத்துள்ளேன். அந்த சமயத்தில் எதிரி சீட்டு தொழில் நடத்தி வந்தார். மேற்படி விவரங்களை என் வழக்கிலும், சாட்சித்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 3, 4 முறை எதிரிக்கு 6 ஆவணங்கள் ஒவ்வொரு முறையும் கையொப்பம்

செய்து கொடுத்துள்ளேன். எதிரி பதிவு செய்த சீட்டு நடத்திவந்தாரா என்று எனக்கு தெரியவில்லை. சீட்டில் மொத்தம் எத்தணை நபர்கள் பங்கு எடுப்பார்கள் என்றால் 20 நபர்கள் இருப்பார்கள். மேற்படி 20 நபர்கள் தான் எதிரி மீது மற்ற காசோலை வழக்கு மற்றும் சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரியும், நானும் கூட்டாக தொழில் செய்து வந்து அதில் அவருடைய காசோலையை எடுத்துக்கொண்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளளேன் என்றால் சரியல்ல. நான் தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. அனைத்து பங்கு நிறுவனத்திலும் நான் முறையாக கையொப்பம் செய்துதான் பங்கு தாரராக உள்ளேன் என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of Witness.